


# பொதிகை



# கலசம்

**எஸ்.ஜெகதீசன்**



உலகின் முதலாவது மிகச் சிறிய குறுக்கெழுத்துப் போட்டி

உ

# பொதிகை கலசம்

உலகின்
முதலாவது மிகச்சிறிய
குறுக்கெழுத்து

எஸ்.ஜெகதீசன்

இளவாலை ஜெகதீசன் மின்னூலகம்
கனடா





# பொதிகை கலசம்

இலவசமாக இந் நூலின் மின் நூல் பிரதியை பெற்றுக் கொள்ள விரும்புவோர் S.Jegatheesan75@gmail.com என்ற மின் முகவரியில் தொடர்பு கொள்ளலாம்.

வெளியிட்ட திகதி: 14.01.2023 பொங்கல் திரு நாள்.

இளவாலை ஜெகதீசன் மின்னூலகம்
கனடா

## என்னுரை!

தெரிந்த பதில்கள்தான்.

கேட்கும் விதம் சிந்திக்க வைக்க வேண்டும் என்பதில் எந்தவொரு போட்டி நிகழ்ச்சித் தயாரிப்பாளருக்கும் மாற்றுக்கருத்து இருக்கப் போவதில்லை.

வார்த்தைகளால் வலை விரிக்கும் வல்லமை ஆளாளுக்கு மாறுபடும்.

1993 ம் ஆண்டு கனடாவில் வெளிவந்த பொதிகை இதழில் இடம் பெற்ற குறுக்கெழுத்துப் போட்டி இதுவாகும்.

உலகின் எழுத்து வடிவில் வந்த முதலாவது மிகச்சிறிய குறுக்கெழுத்துப் போட்டி என்ற சாதனை இதற்கு உண்டு.

மாணவரை மனதிலிருத்தி தயாரிக்கப் பெற்றிருப்பினும் தொடர் சங்கிலி வடிவிலான இப் போட்டி பெரியவர்களாலும் அக் காலத்தில் பெரு வரவேற்பை பெற்றிருந்தது.

மூங்கில் என்பது பரிச்சயமான சொல். ஆனால் அதற்கு வேறு 32 சொற்களும் உள என்றது தேட வைத்தது. அதிசயிக்க வைத்தது

வெட்டுக் காயத்துக்கு போடப்படுவது மருந்து என கருதியவர்கள் பின்னர் வலி மறந்து சிரித்தனர்.

நெட்டி என்பது கூட பலரை நெட்டி முறிக்க வைத்ததாகக் கேள்வி.

உதுக்குத்தான் யோசித்தேன்!

பதிலுக்கு ஏதாவது செய்ய வேண்டும் எனத் திணறாதவர்கள் என் வாழ் நாள் வரமானார்கள்.

தொலைந்து போகும் அடையாளங்களை நினைவில் நிறுத்தும் கேள்விகளும் இருப்பதாக அன்று சொன்னவர்கள் இன்று 2023 ம் ஆண்டிலும் தொலைந்து போன அடையாளம் ஆகிவிடவில்லை.

**எஸ்.ஜெகதீசன்**

# போட்டி இலக்கம் ஒன்று.

*<u>இடமிருந்து வலம்:</u>*

*1. சப்திக்கும் எதற்கும் இது உண்டு.*

*2. தம்பதியைச் சிலர் இப்படி அழைப்பர். காலணிகளையும் சிலர் இதனுடன் சேர்ப்பர்.*

*3. அட்லஸில் இல்லாதிருந்தாலும் கேள்வி ஞானத்தால் பலருக்கும் பரிச்சயமான இடம்.*

*4. சிரி என்பதற்கே அர்த்தம் தெரியாதவர்களுக்கு இது எங்கே தெரியப் போகின்றது.*

*5. இதனைப் பரப்புவதும் ஒரு கலை.*

*6. ஒரு வகை நுண்ணங்கி.*

*7. இவற்றின் மலர்வில் பலத்த அதிர்வு இருக்கிறதாமே?*

*8. இஸ்லாமிய மகளிரின் முகத்திற்கு இது தேவையா என வாதிப்போரும் உளர்.*

*<u>மேலிருந்து கீழ்:</u>*

*1. இந்தக் காலத்தில் நவீன நாகரீகம் ஏது?*

*2. பாலைவனத்தில் கிடையாது.ஆனால் நீரல்ல.*

*3. அவுஸ்திரேலியா உருவாகியது இவனைப் போன்ற பலரால்.*

*4. பெண்களுக்கு அழகூட்டுவது. ஒரு காலத்தில் போராட்டத்துக்கும் வலுவூட்டியது.*

*5. எதற்கெல்லாமோ இருக்கும் இது கல்விக்கு என்றுமே இருக்க முடியாது.*

*6. உலகில் பல மாற்றங்கள் இக்குறுகிய காலப் பகுதியில் நடைபெறுகின்றன.*

*7. எதுவுமே கிடைக்காது விடின் இதுதான்.*

*8. வீர பாண்டிய கட்டப்பொம்மனிடம் பறங்கியர் பெற்றுக் கொள்ளத் திண்டாடியது.*

*9. ஒரு காலத்தில் யாழ். பிராந்தியத்துக்கு உல்லாச பிரயாணிகளை இழுத்தது இது!*

*<u>இடமிருந்து வலம்:</u>*

*9. சைக்கிள் செயினும் சோடா புட்டிலும் இவனிடம் சிக்கிச் சீரழிவதும் உண்டு*

*10. மாடா? மறுமொழியா? நீங்கள்தான் சொல்வதில் வல்லவராயிற்றே!*

*12. பிரிவு.*

*13. இதனை இங்கு சலவை இயந்திரமும் அங்கு போராட்ட காலத்தில் சாம்பலும் பனங்களியும் வெண்மையாக்கும்*

*14. இது பெண்ணுடையதாக இருந்தால் கட்டழகு வாலிபர் தொட்டுப் பார்ப்பர். கவிஞர்கள் தமிழால் தட்டிப் பார்ப்பர்.*

*15. எல்லோருக்கும் இதில் உரிமை*

*16. பாலர் பராமரிப்பு நிலையமாக மலையகத்தில் பலர் இதனையும் காண்பர்*

*17. ஒரு பறவை மழைக்குக் கட்டியம் கூறுவதற்காக காட்டுவது இதை*

*18. பெண் தன்மை கொண்ட ஆண்*

*மேலிருந்து கீழ்:*

*10. பல கடைகளில் இது குறைந்தால் அங்கு ஏதோ கொண்டாட்டம்*

*11. பெண்ணைக் குறிக்கும். கால் அகன்றால் போதைவஸ்து*

*12. பெரிய ஆள். சீமானா? எஜமானா?*

*13. எனக்கு நீ. உனக்கு நான்*

*14. இதன் நிலையத்திறப்பு விழாக்களை தமிழ் நாட்டில் அதிகமாக அலங்கரித்தவர் சிரிப்பு நடிகர் குமரிமுத்து*

*15. இதன் மூலம் தம்மை உசார்படுத்த முடியும் எனின் தமது மூக்கைக் கூட பாவிப்பவர் யாழ்ப்பாணத்தவர்.*

*16. கலைமகள் கைப் பொருளே உன்னைக் கவனிக்க ஆள் இல்லையா?*

*17. இனத்துவேஷம் ஏற்பட இதுவும் ஒரு காரணம்*

*18. சக்தி மிக்க இந்த ஆயுதம் பலரை உயர்த்தவும் வல்லது.தாழ்த்தவும் வல்லது*

*<u>இடமிருந்து வலம்:</u>*

*19. மையவாடியை நாடாதது இந்த மையம்*

*20. கம்பு*

*21. தளபதியைத் தலைவனாக்குவது*

*23. இந்த ஜந்து மேனியில் படின் தோஷம் என்பது ஜதீகம்*

*24. கர்ணன் முதன் முதலாகப் பயணித்த படகு*

*25. அதுவும் இதுவும் ஒன்றா? இல்லை*

*26. இதனை எடுத்த பின் சக்கை. அடி சக்கையல்ல*

*<u>மேலிருந்து கீழ்:</u>*

*19. இதனைக் கண்டால் வாலிபருக்குப் பயம்.*

*20. இவனைக் கண்டால் விரட்டுவதும் சமுதாயம். இவன் மிரண்டால் மிரளுவதும் சமுதாயம்.*

*21. குளித்த பின் எவரும் இதனைத் தீண்டார்!*


*22. பஸ்பம்*

*இடமிருந்து வலம்:*

*1. தொனி 2. சோடி 3. கைலை 4. நகு 5. கலை 6. நொதி 7. முகை 8. திரை 9. கேடி 10. விடை 12. துறை 13. துணி 14. சிலை 15. பொது 16. ஏணை 17. தோகை 18. பேடி 19. நடு 20. கோல் 21. சேனை 23. தேரை 24. பேழை 25. வேறு 26. சாறு*

*மேலிருந்து கீழ்:*

*1. தொல் 2. சோலை 3. கைதி 4. நகை 5. கரை 6. நொடி 7. முடை 8. திறை 9. கேணி 10. விலை 11. மாது 12. துரை 13. துணை 14. சிகை 15. பொடி 16. ஏடு 17. தோல்18. பேனை 19. நரை 20.கோழை 21. சேறு 22. நீறு*



# போட்டி இலக்கம் இரண்டு.

*இடமிருந்து வலம்:*

*1. பாண்டவர் தோற்க இதுவும் காரணம்*

*2. இது இல்லாத ஊருக்கு இலுப்பைப் பூ சர்க்கரை என்பது பழமொழி*

*3. நீங்கள் ஏதாவதொன்றில் நிபுணரா? அப்ப சந்தேகமில்லாமல் இவர்தான்*

*4. இறுதி யாத்திரைக்கான இலவச வாகனம்*

*5. குபேரனிடமிருந்தது. குசேலரிடம் இல்லாதது.*

*6. தடுப்பு*

*7. நாக்கு இதனை நன்கு அறிய வல்லது*

*8. சில கால் நடைகளுக்கு இதை மீட்டும் சக்தி உள்ளது*

*9. மூன்றாம் நாளில் இதற்காக ஏங்குபவர் சிலர்*

*<u>மேலிருந்து கீழ்:</u>*

1. இனக்கலவரங்களைத் தொடர்ந்து இலங்கையில் தமிழர்கட்கு ஏற்பட்ட பாதிப்புகளில் இதுவும் ஒன்று.
2. ஆரம்பத்தில் வள்ளுவரின் தாய் என்பவர்களும் உளர்
3. ஆடத் தெரியாதவன் ஏறக் கூடாதது
4. பொம்மை
5. வரிசை
6. இது நான்கு என்கிறது இந்து சமயம்
7. எதையும் இதுவாகக் கருதினால் பாரம்தான்
8. இதனால் வசமாகா இதயம் எது
9. பல நாள் வாழ்பவர் இதனால் பாதிப்படையாதிருப்பவர்
10. காய்ந்தால் இது சருகு
11. இது வாய் திறந்தால் பஞ்சாங்கம் பார்த்தவர்களும் வாழ்ந்தனர்

*<u>இடமிருந்து வலம்:</u>*

*10. தூக்கத்துக்காக மூடுவது. சில வேளை துக்கத்துக்காகவும் மூடும்*

*12. இதனை அறியும் கருவி எப்பவோ சீனரால் கண்டுபிடிக்கப்பட்டது*

*13. பாரதியாருக்குத் தேவைப்பட்டது. பராசக்தியிடம் கேட்டிருந்தாரே*

*14. இதில் ஒன்றை புதிதாக தெரிவு செய்ய பெண்களுக்கு அதிக நேரமாகும் என்கிறார் அனுபவப்பட்ட வியாபாரி*

*15. இதற்காக மாரடிப்பது போலி வேஷம்*

*16. கம்பராமாயணமும் சிலப்பதிகாரமும் கை வைத்த பெண்ணின் ஓர் அங்கம்*

*17. இறகு இல்லாத பறவை*

*18. ஒரு மாதிரிச் சமாளி*

*19. கனடாவில் இதனை எங்கும் காணலாம். ஆனால் யாழ்ப்பாணத்தில் எங்கும் கிடையாது*

*மேலிருந்து கீழ்:*

*12. ஆலோலம் பாடி வள்ளி காவல் புரிந்தது இதனை என்பது கந்த புராணம்*

*13. இரவில் அதிக நேரம் விழித்திருப்பவர்களுக்கு இந்தப் பொழுது தெரியாமல் போவதுமுண்டு*

*14. போற்றுவீர்களா? துதிப்பீர்களா?*

*15. நளாயினிக்கு தனது கணவனை சுமக்கப் பயன்பட்டது*

*16. பூர்த்தி*

*17. பயம். அகோர பயம்*

*18. பொட்டலம்*

*19. சூழலைப் பாதிப்பது*

*20. ரகம்*

*21. பெரியவரால் பாலுக்கும் சிறியவரால் நூலுக்கும் இடப்படுவது*

*22. நிலைக் கண்ணாடி*

*<u>இடமிருந்து வலம்:</u>*

*20. இது என்றாலே வேதனைதான்*

*21. பொருள்*

*23. உலகமெங்கும் இவரது பிறந்த நாளுக்காக விடுமுறை உண்டு*

*24. பல போர்களுக்கு மூல காரணம்*

*25. பூரணம்*


*26. மகிழ்ச்சியைக் குறிக்க உயரந்தும் சோகத்தைக் குறிக்கத் தாழ்ந்தும் இருப்பது*

*இடமிருந்து வலம்:*

*1. சூது 2. ஆலை 3. மேதை 4.பாடை 5.நிதி 6. மடை 7. சுவை 8. இரை 9. பிறை 10. இமை 12. திசை 13. காணி 14. சேலை 15. கூலி 16. முலை 17. கிவி 18. சடை 19. மாடி 20. வலி 21. உரை 23. ஜேசு 24. பகை 25. நிறை 26. கொடி*

*மேலிருந்து கீழ்:*

*1. சூறை 2. ஆதி 3. மேடை 4. பாவை 5. நிரை 6. மறை 7. சுமை 8. இசை 9. பிணி 10 இலை 11. கௌலி 12. தினை 13. காலை 14. சேவி 15. கூடை 16. முடி 17. கிலி 18. சரை 19. மாசு 20. வகை 21. உறை 22. ஆடி*



# போட்டி இலக்கம் மூன்று.

*இடமிருந்து வலம்:*

*1. ஒரு பக்தை. எம்.எஸ்.சுப்புலட்சுமி நடித்த மிகப் பழைய படமொன்றும் ஐஸ்வர்யா நடித்த பழைய படமொன்றும் இதே பெயரில் வெளிவந்தன*

*2. ஜெயலலிதாவிற்கு சசிகலா ஒரு காலத்தில் இப்படி*

*3. இதனைச் செய்பவர்களுக்கு வல்வினை போகும் என்கிறது கந்தஷஷ்டி கவசம்*

*4. நிலைத்து நிற்காதே*

*5. ஆய கலைகள் அறுபத்தி நான்கிற்கும் அதிபதி*

*6. தலை விதிப்படி அமையும் இருவரில் ஒருவர்*

*7. இலங்கை பாடசாலைகளை முன்பு ஆரம்பித்து வைத்தது*

*8. ஆயர் வேத மருத்துவத்தில் இது கலந்தால் தெவிட்டும்*

*<u>மேலிருந்து கீழ்:</u>*

*1. புனித அந்தோணியாரின் பிரசங்கத்தை விசுவாசித்த கடல் இனம்*

*2. கடல் வாகனம்*

*3. இரும்புச் சாமான்களுக்கு வயது ஏற இதன் நெருக்கமும் கூடும்*

*4. பிரிவு*

*5. கனடா வந்த நம்மவர் பலர் கடந்த பாதை*

*6. இது இதைக் கெடுக்கும்*

*7. இருப்பிடம்*

*8. ஆசை அதிகரிக்க இதுவும் அதிகரிக்கும்*

*9. பாதையில் வேகத்தை கட்டுப்படுத்த இதுவும் சில இடங்களில் இருப்பதுண்டு*

*10. புன்னகை மன்னன் பூ விழிக் கண்ணன் இருவருக்காகவா? ஒருவரை நீங்கள் பிடியுங்கள்*

*இடமிருந்து வலம்:*

*9. இதனை எடுத்தவர் எல்லாம் தண்டல்காரரா?*

*10. பாக்கியசாலியான பெண்கள் இதனைப் பிடித்திருப்பர் என்பது பழமொழி*

*12. கோப்பு*

*13. இதை செய்பவர் வள்ளல்*

*14. கச்சேரி நடக்கின்றது என்பதை கிராமத்தில் இப்படியும் சொல்வர்*

*15. நீர் நிலை*

*16. ஒரு பழமொழியின் பாதி இதன் வாயை மூடலாம் என்கிறது*

*17. பாம்பைக் கண்டால் படையும் நடுங்கும். ஆனால் பாம்போ இதனிடம் நடுங்கும்*

*18. பழைய கால மரண தண்டனை*

*<u>மேலிருந்து கீழ்:</u>*

*11. எதிரி*

*12. முடிக்குரியவன்!*

*13. பாவம் பழிக்குப் பயந்தவர் இதனைச் செய்யத் துணியார்*

*14. நீங்கள் பிழை என்றால் மறுமொழி சரியாக வராது*

*15. சப்தம்*

*16. உணவை பாதுகாக்க கிராமங்களில் பயன்பட்டது*

*17. பார்த்தசாரதியின் தத்துவம்*

*18. அனைத்துலக சிறுவருக்கும் மிகவும் பிரியமானது*

*19. அரக்கர்களும் வேடர்களும் இருப்பதாக கருதப்படும் இடம்*

*20. கல்யாணத்தில் கவிதையில் உள்ள ஒழுங்கு*

*21.? 22. எல்லை*

*<u>இடமிருந்து வலம்:</u>*

*19. போராளிகளாலும் வைக்கப்படும். மாடுகளுக்கும் வைக்கப்படும்*

*20. இலங்கையில் சிறை வைக்கப்பட்ட காவியத்தலைவி*

*21. வித்து*

*23. எமது உடலில் இருந்து கொண்டே எமது எதிர் காலத்தை அறிவிப்பது*

*24. பல நாடுகளில் அகதிகள் உருவாக அடிப்படைக் காரணம்*

*25. ஓர் ஆபிரிக்க நாடு அல்லது ஓர் ஆசிய நாடு என்றாலும் சரி*


*26. இயற்று*

*இடமிருந்து வலம்:*

*1. மீரா 2. தோழி 3. துதி 4. அசை 5. வாணி 6. குரு 7. மணி 8. தேன் 9. தடி 10. பானை 12. கோவை 13. கொடை 14. சமா 15. ஏரி 16. உலை 17. கீரி 18. கழு 19. குறி 20. சீதை 21. விதை 23. ரேகை 24. போர் 25. கானா/சீனா 26.புனை*

*மேலிருந்து கீழ்:*

*1. மீன் 2. தோணி 3. துரு 4. அணி 5. வான் 6. குடி 7. மனை 8. தேவை 9. தடை 10. பாமா 11. வைரி 12. கோன் 13. கொலை 14. சரி 15. ஏழு 16. உறி 17. கீதை 18. கதை 19. குகை 20. சீர் 21. வினா 22. முனை*



# போட்டி இலக்கம் நான்கு.

*இடமிருந்து வலம்:*

1. *புது நெல்லு புது நாத்தில் இரண்டு தடவை வருவது. தேவை எனின் மீண்டும் பாருங்கள்*

2. *வைபவங்களில் பிள்ளையாராவது*

3. *விஷ்ணு*

4. *இலங்கையில் இலங்கும் மாதா கோவில் இங்குளது*

5. *நீங்கள் கொதிப்படைந்தால் வராது. நீர் கொதிப்படைந்தால் வரும்.*

6. *ஒரே ஜீவன் ஒன்றே உள்ளம் பாடல் உள்ள திரைப்படம்*

7. *விரைவு*

8. *காலை அகற்றி விடின் ரசி*

9. *வழக்காளி*

*<u>மேலிருந்து கீழ்:</u>*

*1. இந்த சமாதானப் பறவை வீட்டில் இருப்பின் ஐஸ்வர்யம் என்பது பழந்தமிழரின் நம்பிக்கை*

*2. எங்கும் எம்முடன் வரக் கூடிய ஒரு குட்டிக் காவற்காரன்*

*3. புத்தரின் தாய்*

*4. திங்கள்*

*5. முடிவிலாத ஆசியா*

*6. இதற்கு முன் அகரம் போட்டாலும் அநீதி. போடுவதும் அநீதி*

*7. இதனைத் தரிப்பது பெண்ணினம்*

*8. இவளின் நெஞ்சம் கண்ணனுக்குச் சொந்தம்*

*9. பரம்பரைக்கு உதாரணம் இந்த மரம்*

*10. இந்தியாவிற்கு இந்தத் திசையில் இலங்கை*

*11. கிரீடம்*

*இடமிருந்து வலம்:*

10. பாதை

12. அழகிய கூந்தலை உடையவள் ஸ்ரீ வில்லிப்புத்தூர் ஆண்டாள்

13. வெட்டுக் காயத்துக்குப் போடப்படுவது

14. நான்! நானேதான் மாறமாட்டேன்

15. உண்மையானது அல்ல

16. எதனையும் நிறைவாகச் செய்யாதுவிடின் இதுதான்

17. தீட்டினால் வருவது

18. புருஷன் என்போரும் உளர். இறைவன் என்போரும் உளர்.

19. பருத்தித்துறை இந்தச் சிற்றுண்டிக்கு பிரபலம்

20. உடம்பு

21. உச்சி

*மேலிருந்து கீழ்:*

*12. மதியாதார் முற்றம் மிதியாதிருப்பது இதற்கு சமானம்*

*13. கடவுள்*

*14. மலருடன் இது சேர்ந்தால் வாசம் வீசும்*

*15. உபதேசி*

*16. அற்பனுக்குப் பவிசு வந்தால் அர்த்த ராத்திரியில் இது விரியும்*

*17. ராமாயணக் கிழவி*

*18. நீர்ம நிலையிலிருந்து திண்ம நிலைக்கு உறையும் போது வருவது*

*19. பவனம்*

*20. உயர்ந்த வகுப்பு இந்த வகுப்பு*

*21. கடலலையிலும் காணப்படும் நீர்க்குமிழி*

*22. விண்மீன்*

*23. இது சேரந்தால் வருவது பெரு வெள்ளம்*

*24. கிளியோபத்ராவுடன் தொடர்புடைய நதி*


*25. பாதி 26. தேசம்*

*<u>இடமிருந்து வலம்:</u>*

*1. புது 2. சாணி 3. மால் 4. மடு 5. ஆவி 6. நீயா 7. கதி 8. ராசி 9. வாதி 10. தெரு 12. கோதை 13. இழை 14. நான் 15. போலி 16. குறை 17. கூர் 18. பதி 19. வடை 20.மேனி 21. நுனி 23. துளி 24.நைல் 25. அரை 26. நாடு*

*<u>மேலிருந்து கீழ்:</u>*

*1. புறா 2. சாவி 3. மாயா 4. மதி 5. ஆசி 6. நீதி 7. கரு 8. ராதை 9. வாழை 10. தென் 11. மௌலி 12. கோடி 13. இறை 14. நார் 15. போதி 16. குடை 17. கூனி 18. பனி 19. வளி 20. மேல் 21. நுரை 22. உடு*



# போட்டி இலக்கம் ஐந்து.

*இடமிருந்து வலம்:*

*1. பண்டிகைகளில் குதூகலத்தையும் போர்களில் கொடூரத்தையும் வெளிப்படுத்தும்*

*2. பிரமாதம் என்பதை சிலர் இப்படியும் சொல்வர்*

*3. மாமிசம்*

*4. வானத்தை கூரையாகக் கொண்டவரின் வாழ்விடம்*

*5. பகல் இரவில் முடியும். இது கடலில் முடியும்*

*6. வாத்தியகாரருக்கு இந்த அளவு தேவை அற்றது. ஆனால் சுவாத்தியகாரருக்கு அவசியம்*

*7. முறை அல்லது மார்க்கம்*

*8. புறாவுடன் தொடர்பு கொண்ட குறு நில மன்னன்*

*9. அரண அடையாளம் இதைக் குறிக்கும்*

*மேலிருந்து கீழ்:*

1. எதிலும் அதீத பற்று

2. பிரகாசம்

3. கிரணம் பார்க்க இதனைக் கண்ணாடியில் பிடிப்பர் கிராமத்துச் சிறுவர்

4. சின்னச் சின்ன இழை பின்னிப்பின்னி வந்து சித்திரச் சேலையாவது இதில்

5. அல்லா

6. இறுகக் காய்ச்சிய பாணி

7. தமிழரின் பிரதான உணவு தங்கி இருப்பது இதில்

8. குழவி

9. காளையரும் வீசுவர். பொலிஸாரும் வீசுவர். அதனால் மீனுக்கு மட்டும் என்றில்லாதது எது?

*<u>இடமிருந்து வலம்:</u>*

*10. தென் கொரிய தலை நகர்*

*12. ஆதாரம் இது என்றால் நிரூபிப்பதும் இதுதானே என்பீர்கள்*

*13. அரசியல் வாதிகள் உருட்டுவர். எஜென்ஸிகாரர் மாற்றுவர்*

*14. நிராகரி என்றால் மீண்டும் என்பீர்கள். மீண்டும் என்றால் நிராகரி என்பீர்கள்.*

*15. கன்னியைக் கவர்வது*

*16. முஸ்லீம்கள் இந்த வழிபாட்டை ஏற்பதில்லை*

*17. உடலுக்கும் உள்ளத்துக்கும் உகந்தது.உறுதி தருவது*

*18. உவகை*

*19. இலங்கை வதை முகாம்*

*20. வருத்தக்காரன்*

*21. இது இன்றி எதுவும் அசையாது*

*மேலிருந்து கீழ்:*

*10. சிலருக்கு மதிய உணவுக்கு கட்டாயமாக இது வேண்டும்*

*11. யாராவது எதையாவது பிழையாகச் செய்தால் இது இல்லையா என்று அவரிடம் கேட்பது சாதாரணம்*

*12. பருவம்*

*13. ஒன்றுதான் இங்கு! ஆனால் காட்டிலோ பல*

*14. பிரமாண்டமான*

*15. இவளின் தாஸன் ஒரு மகாகவி*

*16. நடிகையின் பெயரில் வரும் தமிழக வாரமலர். இலங்கையில் மின் விசிறி தையல் மெஷின்*

*17. யோககாரன்*

*18. நெட்டி*

*<u>இடமிருந்து வலம்:</u>*

*23. இதை விட்டு ஆவி போனால் கூடவே வருவதென்ன என்கிறது ஒரு சினிமா பாடல்*

*24. ராமன் ஆண்டால் என்ன? ராவணன் ஆண்டால் என்ன? என்பவர்கள் கருதும் பதவி இது*

*25. பாக்கியவதிகளுக்கும் தேவை.துப்பாக்கிவாதிகளுக்கும் தேவை*

*26. அம்பிகை*

*<u>மேலிருந்து கீழ்:</u>*

*19. வாயுக்கோளாறிற்கு வைத்தியர் சிபார்சு செய்யும் நிவாரணி*

*20. இங்கிலாந்தின் தேசியப் பூ*

*21. அரங்கம்*


*22. முடி மயிர்*

*இடமிருந்து வலம்:*

*1. வெடி 2. ஜோர் 3. புலை 4. தரை 5. நதி 6. பாகை 7. நெறி 8. சிபி 9. வகு 10. சோல் 12. ருசு 13. தலை 14. மறு 15. காளை 16. உரு 17. யோகா 18. களி 19. பூசா 20. ரோகி 21. அணு 23. கூடு 24. ராஜா 25. ரவை 26. கௌரி*

*மேலிருந்து கீழ்:*

*1. வெறி 2. ஜோதி 3. புகை 4. தறி 5. நபி 6. பாகு 7. நெல் 8. சிசு 9. வலை 10. சோறு 11. மூளை 12. ருது 13. தரு 14. மகா 15. காளி 16. உசா 17. யோகி 18. கணு 19. பூடு 20. ரோஜா 21. அவை 22. சௌரி*



# போட்டி இலக்கம் ஆறு.

*இடமிருந்து வலம்:*

*1. இறைவன் இருக்கின்றான். கண்ணுக்குத் தெரிவதில்லை என்பதற்கு உதாரணமாகும் இது பாலில் மறைந்திருக்கும்*

*2. கிருஷ்ண பரமார்த்தமாவின் வாத்தியக் கருவி*

*3. வைத்தியத்துக்கு இரண்டு இல்லை என்பது பழமொழி. ஒன்று நாள்.மற்றது இது*

*4. அணை*

*5. இலங்கை என்றதும் இப்ப இது உடனே ஞாபகத்தில் வருவதில்லை*

*6. தமயந்தியிடம் அன்னம் நளனுக்காக கொண்டு சென்றது*

*7. கிராமங்களில் மாட்டின் வயதைக் கணிக்க உதவுவது.*

*<u>மேலிருந்து கீழ்:</u>*

*1. வாசம்*

*2. போராட்ட காலங்களில் இதனைப் பார்ப்பவரும் இருக்கவே செய்வர்*

*3. இது இருக்க சுளையை உண்பவர்கள் எத்தர்கள். தோல் எனின் தவறு*

*4. பக்கம் பல சேர்தல்*

*5. நல்லதல்ல*

*6. பிரகலாதனுக்காக இறைவன் வெளிப்பட்ட இடம்*

*7. பாடலுக்கு அவசியம்*

*8. சேருமிடம் அறிந்து எதனைச் செய்ய வேண்டும் என்போர் பெரியோர்*

*9. சாங்கம்*

*10. வேள்வியில் வெட்டப்படாத ஆடு*

*11. கழுத்தில் அணியும் மாலை*

*<u>இடமிருந்து வலம்:</u>*

*8. பாரதி இதனை மேடாக்கி இலங்கைக்கு வீதி போட விரும்பினான்*

*9. உடம்பின் அளவு இதனால் எட்டு*

*10. இது சிவந்தால் கண் சிவக்கும் என்கிறது ஒரு பழைய தமிழ்த் திரைப்படம்*

*12. கெட்ட*

*13. இவை பல சேரின் நதியாகும்*

*14. திருவை இப்படியும் அழைப்பர்*

*15. சூரபத்மனின் இது பிளந்து சேவலும் மயிலும் வந்தது என்பது கந்தப் புராணம்*

*16. தொலை காட்சிக்கும் தொலை பேசிக்கும் பொதுவானது*

*17. தேவமாதா*

*18. பொறுமை உடையவர் இதனை ஆள்வர்*

*__மேலிருந்து கீழ்:__*

*12. கிராமங்களில் நீர் இறைக்க ஒத்தாசை புரிவது*

*13. கடிதம் என்றும் சொல்லப்படும். வேலி அடைக்கவும் பயன்படும்*

*14. அழுவதற்கு எதிர்*

*15. கனவானின் தாயாக இருக்க வேண்டிய அவசியமில்லை. ஆனால் கணவனின் தாயாக இருத்தல் வேண்டும்*

*16. மொத்தம்*

*17. இது ஒரு மலை*

*18. அணி*

*19. குளித்த பின் இதனை குடி என்கிறது ஒரு பழமொழியில் பாதி*

*20. கற்புடையவள் இப்படிச் சொன்னால் மழை பெய்யுமா?*

*21. சமுத்திரம் 22. நீதி மன்று அல்லது வரி*

*இடமிருந்து வலம்:*

*19. இரவுப் பறவை*

*20. தென் அமெரிக்கா நாடு ஒன்று*

*21. பெண்களுக்கான இடங்களில் இருக்கும் அருகதை அற்ற இனம்*

*23. இந்த வினை தொடருமா?*

*24. இது இருந்தால் வங்காளம் போகலாமாம்*

*25. சந்திரனின் மேற் பரப்பில் ஏராளமாக உள்ளது*


*26. கெடுவான் நினைப்பது இதனையா?*

*இடமிருந்து வலம்:*

*1. நெய் 2. வேணு 3. கோள் 4. நூர் 5. தீவு 6. தூது 7. பல் 8. சேது 9. சாண் 10.மண் 12. துர் 13. ஓடை 14. சிறி 15. மார் 16. தொலை 17. மேரி 18. பூமி 19. கூகை 20. பெரு 21. ஆண் 23. ஊழ் 24. வாய் 25. குழி 26. கேடு*

*மேலிருந்து கீழ்:*

*1. நெடி 2. வேவு 3. கோது 4. நூல் 5. தீது 6. தூண் 7. பண் 8. சேர் 9. சாடை 10. மறி 11. தார் 12. துலா 13. ஓலை 14. சிரி 15. மாமி 16. தொகை 17. மேரு 18. பூண் 19. கூழ் 20. பெய் 25. ஆழி 26. கோடு*



## போட்டி இலக்கம் ஏழு.

<u>இடமிருந்து வலம்:</u>

1. பட்சி
2. விழுது விடும் மரம்
3. செபி அல்லது சொல்
4. கனடாவிலிருந்த பெண் பிரதமரின் முன் பெயர்
5. கட்டு
6. அடையாளம் அல்லது தழும்பு
7. சிற்பியின் பேனா
8. வறுமை
9. நீக்கு
10. கடவுள் அல்லது சந்நியாசி
12. திருமதி மன்மதன்

*<u>மேலிருந்து கீழ்:</u>*

*1. அருவருப்பான ஜந்து*

*2. கட்டளை*

*3. திருநீலகண்டர் மறைவாய் புதைத்து வைக்க மாயமாய் மறைந்தது*

*4. சோதிடம் சொல்லும் பறவை*

*5. பெண் யானை*

*6. பாதை அல்லது மரபு*

*7. நெல்லின் கவசம்*

*8. உழக்கு*

*9. சிங்கம்*

*10. உபத்திரவமில்லாத இந்தப் பாம்பு குறுக்கே போவது அபசகுனமாம்*

*11. முன்னாள் - பழைய*

*<u>இடமிருந்து வலம்:</u>*

*13. அங்குசத்தால் அடங்கும் மிருகம்*

*14. கீறு*

*15. இதன் உறுப்பினர் ஜேர்மனியில் துவேஷம் கக்குகின்றனர்*

*16. சந்திரனில் இறங்கிய முதலாவது மனிதரின் முன் பெயர்*

*17. தஷ்கண்டில் காலமான இந்திய பிரதமரின் முன் பெயர்*

*18. மழி*

*19. இது இல்லாமல் எதிரொலியும் இல்லை*

*20. பெரு நாட்டின் பெரு நகரம்*

*21. இது கடக்கும் வரை சகோதரர் என்பது பழமொழி*

*23. திறந்த பிரதேசம் 24. அமெரிக்காவில் பெரும் பயறு*

*25. உள்ளம் என்பது 21 மே.கீ. அதில் உண்மை என்பது இது. 26. இயற்கை உரம்*

*<u>மேலிருந்து கீழ்:</u>*

*12. தினகரன்*

*13. சாப விமோசனத்துக்கு முன்பாக அகலிகை*

*14. துதிப்போர்க்கு இந்த வினை போகும் என்கினறது கந்தஷஷ்டி கவசம்*

*15. கொக்கு இனப் பறவை*

*16. சிலர் போலியாக இந்தக் கண்ணீர் வடிப்பர்*

*17. தீபெத்திய மத குரு*

*18. சிறிய*

*19. இருள் அகலவும் அகற்றவும் இது*

*20. பழைய கால எழுத்து வடிவம்*

*21. உள்ளம் என்பது இது. அதில் உண்மை என்பது 25 இ.வ*


*22. ரோஜாவின் ராஜா என அழைக்கப்பட்ட இந்தியப் பிரதமர்*

இடமிருந்து வலம்:

*1. புள் 2. ஆல் 3. ஓது 4. கிம் 5. பிணை 6. வடு 7. உளி 8. மிடி 9. அழி 10. சாமி 12. ரதி 13. கரி 14. வரை 15. நாஜி 16. நீல் 17. லால் 18. சிரை 19. ஒலி 20. லிமா 21. ஆறு 23. வெளி 24. கௌபி 25. ஊமை 26. எரு*

மேலிருந்து கீழ்:

*1. புழு 2. ஆணை 3. ஓடு 4. கிளி 5. பிடி 6. வழி 7. உமி 8. மிதி 9. அரி 10. சாரை 11. மாஜி 12. ரவி 13. கல் 14. வல் 15. நாரை 16. நீலி 17. லாமா 18. சிறு 19. ஒளி 20. லிபி 21. ஆமை 23. நேரு*



# போட்டி இலக்கம் எட்டு.

இடமிருந்து வலம்:

1. காலம்
2. முன்னெறி தெய்வங்களில் ஒருவர்
3. மூன்று பக்கம் கடல் சூழ்ந்த தரைப் பகுதி
4. உற்சவம்
5. இரண்டரை நாழிகை நேரம்
6. தவறுதான். ஆனால் பிழையல்ல
7. உலகம் முடியும் காலம்
8. பறவை இனத்தில் பெண் பால்
9. மீசை அல்ல.மிசை
10. இந்திரன் மனைவி
12. ஆறு பெரும் பொழுதுகளில் ஒன்று

*மேலிருந்து கீழ்:*

1. பண்டிதன் - பிரமன்
2. தயிருக்காக பாலில் இடப்படுவது
3. கூட்டம்
4. மருண்டு நோக்கு அல்லது உறக்கம் தெளி
5. கெட்டியான மேற் கவசம்
6. மணமகள்
7. தையல் கருவி
8. நாமம்
9. திரும்பிச் செல் அல்லது திரும்பிக் கொணர்
10. நண்பன்
11. இலங்கை நுளம்பு இந்தியாவில் என்னவாகும்
12. சிறு தெய்வங்களுக்குக் கொடுக்கப்படும் பலி
13. பவனி

*இடமிருந்து வலம்:*

*13. ஏழாம் வேற்றுமை உருபில் உள்ளே*

*14. வியப்பு சம்மதம் போன்றவற்றை காட்டும் ஒரு குறிப்பு மொழி*

*15. பணம்*

*16. சுவாசப்பைகளை மூடியிருக்கும் பகுதி*

*17. கூட்டல் அடையாளம்*

*18. கன்னம்*

*19. ஊன்று*

*20. தாயம் விளையாடும் கருவி*

*21. தர்க்கம்*

*23. மதம்*

*24. கட்டிடத்திறப்பில் வெட்டவும் ஏனைய இடங்களில் கட்டவும் பயன்படும் 25. நெருப்பு 26. மாபிள்*

*<u>மேலிருந்து கீழ்:</u>*


14. *எவ்வாறு*
15. *நிலத்தில் வாழும் ஒரு பறவை*
16. *நீக்கு - நீங்கு*
17. *தோழி*
18. *மகரந்தம்*
19. *ஒன்பது*
20. *கூட்டத்தைக் குழப்ப சிலர் பாவிக்கும் ஆயுதம்*
21. *காற்று*
22. *தொல்லை*

*இடமிருந்து வலம்:*

*1. வேதி 2. பிதா 3. குடா 4. விழா 5. ஓரை 6. வழு 7. ஊழி 8. பேடு 9. மீது 10. சசி 12. கார் 13. உள் 14. ஆகா 15. காசு 16. விலா 17. சக 18. தாடை 19. நடு 20. சோகி 21. வாது 23. சைவ 24. நாடா 25. தேயு 26. கோலி*

*மேலிருந்து கீழ்:*

*1. வேளை 2. பிரை 3. குழு 4. விழி 5. ஓடு 6. வது 7. ஊசி 8. பேர் 9. மீள் 10. சகா 11. கொசு 12. காவு 13. உலா 14. ஆக 15. காடை 16. விடு 17. சகி 18. தாது 19. நவ 20. சோடா 21. வாயு 22. சோலி*



# போட்டி இலக்கம் ஒன்பது.

*இடமிருந்து வலம்:*

*1. ஆலயங்களிலும் தென் இந்திய திரைபட ஆரம்ப தினங்களிலும் நடை பெறுவது*

*2. சபதம்*

*3. ஆயுதங்களைத் தீட்டப் பயன்படும். சிலரது மூளைக்கும் இதனை பிடிக்க வேண்டும் என கிராமங்களில் சொல்வர்*

*4. உறவு அல்லது ஒழுங்கு*

*5. இளம் பெண்*

*6. பொய்த் தோற்றம்*

*7. பயில்*

*8. மாடு மான் போன்றவற்றின் பெண் இப்படியும் அழைக்கப்படும்*

*9. தங்கமே தங்கம்*

<u>*மேலிருந்து கீழ்:*</u>

1. *பெண்*
2. *மதம் மாறிய அப்பரை பீடித்த நோய்*
3. *சூரியனின் மனைவியாம் இந்தத் தேவி*
4. *பூர்த்தி செய்*
5. *அழகு*
6. *சீதை ராமனிடம் வேண்டியது*
7. *சிறுகட்டி*
8. *பெண்ணின் இடுப்பு அல்ல. பெண் அல்லது இடுப்பு*
9. *தாராளமாகக் கொடு என்பதை இப்படியும் சொல்லலாம்*
10. *இரவு*
11. *சுத்தமான*
12. *அபாரமல்ல. பாரம்*
13. *மூங்கிலின் இப் பெயருடன் கூத்தாடுவோருமுளர்*

*<u>இடமிருந்து வலம்:</u>*

*10. உருவமற்றது*

*12. குதிரை*

*13. கோல் அல்லது நீக்கு*

*14. இது இல்லாமல் முருகன் இல்லை. ஆனால் முருகன் இல்லாமல் இது இருக்கும்*

*15. தனது*

*16. விரும்பு*

*17. சாரம்*

*18. கசக்கு*

*19. சவுக்கு*

*20. எது எனின் இதுவும்தான்*

*21. நினைவிலிருந்து நீக்கு*

*23. இலக்கியம் சிறுபூவாய் எனக் கூறும் தோட்டப் பறவை*

*<u>மேலிருந்து கீழ்:</u>*

*14. எல்லைகளில் பாதுகாப்பாக காணப்பட்டவை. யாழ்ப்பாணத்தவரின் அடையாளமாக மாறினவை.*

*15. சிலரது தலையில் இது இரண்டு இருக்கும்*

*16. வேகம்*

*17. சிறைக்காவல்*

*18. மற்றவை*

*19. சிலர் விழித்திருந்தாலும் இதனை காண்பர்*

*20. சிங்க முகமும் உடலும் யானை தந்தமும் தும்பிக்கையும் உடையதாகக் கருதப்படும் மிருகம்*

*21. குஸ்தி*

*22. கோபம் கொள்*

*<u>இடமிருந்து வலம்:</u>*


*24. ரவிக்கை 25. ஓரறிவின் உதாரணம் 26. அடுத்து*

இடமிருந்து வலம்:

1.பூவை 2. சூள் 3. சாணை 4. முறை 5. வாலை 6. மாயா 7. படி 8. நாகு 9. பொன் 10. அரு 12. பரி 13. கழி 14. வேல் 15. சுய 16. விழை 17. கைலி 18. பிழி 19. கசை 20. யாது 21. மற 23. மைனா 24. சோளி 25. புல் 26. இனி

மேலிருந்து கீழ்:

1. பூஜை 2. சூலை 3. சாயா 4. முடி 5. வாகு 6. மான் 7. பரு 8. நாரி 9. பொழி 10. அல் 11. தூய 12. பழு 13. கழை 14. வேலி 15. சுழி 16. விசை 17. கைது 18. பிற 19. கனா 20. யாளி 21. மல் 22. முனி



# போட்டி இலக்கம் பத்து.

*இடமிருந்து வலம்:*

*1. பசுபிக் சமுத்திரத்தில் உள்ள 333 தீவுகளாலான தீவுக் கூட்டம்.*

*2. ஆசை*

*3. சொர்க்க வாசல் இதுதான் என இந்தியாவில் தீர்த்த யாத்திரை செய்வோர் கருதும் ஆன்மிகத் தலை நகர்*

*4. முன்பு ஆச்சிமார் அடிக்கடி இப்படி அழைப்பர். செய்யுள் சீர்களின் முதலெழுத்து ஒன்றிவர அமையும்*

*5. பற்களை பூச்சி பதம் பார்க்கின் ஏற்படுவது*

*6. மந்திரம் சொல் அல்லது பிரார்த்தனை செய்*

*7. காரணம். எப்படி?*

*8. 60 ஆவது பிறந்த நாள் இந்த விழாவிற்குரியது*

*9. ஏவல் செய்பவள். தோழி எனவும் கருதுவர்*

*<u>மேலிருந்து கீழ்:</u>*

*1. மற்றவை*

*2. இதில் ஆடிய பின்பே அம்பலத்தில் ஆட வேண்டும்*

*3. மாலை வேளைகளுக்கு எற்ற ஆண்பால் ராகம்.இதில் செந்தமிழ் தேன்மொழியாள் என்ற பாடலும் உள்ளது*

*4. பலமாக இடி அல்லது தாக்கு*

*5. இலங்கையில் சாக்கு. இந்தியாவில்...*

*6. புதர் இதனால் நிறைந்திருக்கும். புல் பூண்டு அல்ல*

*7. இப்படிச் சொன்னால் எருதுக்குக் கோபம் என்கிறது பழமொழி ஒன்றின் அரைவாசி*

*8. மை*

*9. ஒப்படை*

*10. அதிகம்*

*11. தலைமைக்கு அடுத்தது*

*இடமிருந்து வலம்:*

*10. சீட்டுப்பிடிப்பவர்கள் பணம் சேரும் வேளையில் பிரிவு எனும் கருத்துள்ள இச் சொல்லை பயன்படுத்துவர்*

*12. நெல்லுக்கு இறைத்த நீர் ஆங்கே புல்லுக்கும் இப்படிச் செய்யும் என்கிறார் மூதுரையில் ஔவையார்*

*13. நீர் நிலையினடியில் தங்கியுள்ள சேறு*

*14. தாண்டிச் செல்வாயா? மீறிச் செல்வாயா?*

*15. நல்ல*

*16. மகத்துவம் நிறைந்த மாதம் இதுவும்தான்*

*17. குற்றம் சாட்டப்பட்டவர் தற்காலிகமாக வெளியே நடமாட இன்னொருவர் பொறுப்பாகத் தரும் உத்தரவாதம்*

*18. உள்ளோடும் புண்*

*19. பற்களை சூழ்ந்துள்ள தசை*

*20. சாப்பிடு*

*மேலிருந்து கீழ்:*

*12. சிலரது (மேடைப்) பேச்சில் பறக்கும்.இதில் எலியும் யானையும் சிக்கும்*

*13. புழுதி*

*14. அம்பு*

*15. மணவறையில் தாலி கட்டும் போது இதனால் அதிக நேரம் தாமதமாவதும் உண்டு*

*16. வேறுபடு. வேறுபாடு*

*17. பிறகு*

*18. பயத்தினால் சிலருக்கு வயிற்றில் இது கரையுமே?*

*19. அடைமானம்*

*20. மூன்று*

*21. செருப்பில் அறக் கூடிய பகுதி*

*22. மரம் நிறைந்த பகுதி*

*21. நீர் அள்ளவும் பயன்படும். பந்திகளில் சொதி குழம்பு பாயாசம் பரிமாறவும் உதவும்*

*23. இது உடைய செவியர் இங்கு (அ) நாகரீகமானவரா?*

*24. மலை*

*25. உயிர் எழுத்தின் முன்பாக ஒரு இப்படி மாற்றமடையும்*


*26. மணல் நிறைந்த பகுதி*


*இடமிருந்து வலம்:*

*1. பிஜி 2. அவா 3. காசி 4. மோனை 5. கோறை 6. செபி 7. ஏது 8. மணி 9. சேடி 10. கூறு 12. பொசி 13. தூர் 14. கட 15. சுப 16. மாசி 17. பிணை 18. புரை 19. ஈறு 20. தின் 21. வாளி 23. தோடு 24. கிரி 25. ஓர் 26. பாலை*

*மேலிருந்து கீழ்:*

*1. பிற 2. அறை 3. காபி 4. மோது 5. கோணி 6. செடி 7. ஏறு 8. மசி 9. சேர் 10. கூட 11. உப 12. பொறி 13. தூசி 14. கணை 15. சுரை 16. மாறு 17. பின் 18. புளி 19. ஈடு 20. திரி 21. வார் 22. சோலை*


1
2
3
4
5
6
7
8
9
10
11
12
13
14
15
16
17
18
19
20
21
22
23
24
25
26



இளவாலை ஜெகதீசன் மின்னூலகம்

கனடா